ஊழல் எங்கே?

ஊழல் எங்கே?

ஊழல் எங்கே?

ஓர் உண்மை விளக்கம்

'தோட்டா'

பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு - சென்னை-7

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

எங்கே ஊழல்?

மோசடி! மோசடி!
60 லட்சம் மோசடி?

1. உண்மை உறங்காது

ரூ. 60 லட்சம் மோசடி! அதைச்சுற்றிலும் பெரிய பெரிய மனிதர்களின் பெயர்கள்! பிரதமர் இந்திராவின் பெயர்தான் இதில் பிரதானம்—இதுதான் நகர்வாலா வழக்கு எனப்படும் மர்மம்!

இந்த மர்மத்தை மேலும் மர்மமாக்குகின்றன இரண்டு 'திடீர்' பிணங்கள் முதல் பிணம் இந்த மோசடி வழக்கின் விசாரணை அதிகாரியான போலீஸ் அடிஷனல் சூப்பிரெண்டு இரண்டாவது பிணம், இந்த 60 லட்ச ரூபாய் மோசடியை நடத்தியதாகக் குற்றம் சாட்டப் பட்டு கோர்ட்டின் கூண்டிலே நிறுத்தப்பட்டவர். இவை இரண்டும் போதாதா இதில் புதையுண்டு கிடப்பது மிகப் பெரிய மர்மம் என்று காட்ட?

நீதி விசாரணை நடத்தப்படுமா ?

சின்னஞ்சிறு நிகழ்ச்சிகள்: அரசியல் அக்கப் போர்கள்; அங்காடிக்கடை வதந்திகள்; குழாயடி குழறு

படிகள்; ஆட்சியின் அன்றாட நிர்வாகத்தில் சிறிது வலயம் தப்பிய சம்பவங்கள் — இவற்றுக்கெல்லாம் கூட நீதிவிசாரணைகள் நிறுவப்பட வேண்டுமென்று கோரப் படுகின்றன; நீதிவிசாரணைகள் நிறுவப்படவும் செய்கின்றன.

ஆனால் இப்படி லட்சமாக பட்டப்பகலில் நடந்த மோசடிபற்றி முறையான நீதிவிசாரணையோ, இலாகா பூர்வமான விசாரணையோ கூட நடக்கவில்லை; நடத்தும் உத்தேசமும் இல்லை. காரணம் இதில் சம்பந்தப்பட்டிருப்பவர் பெரிய பொறுப்பிலிருப்பவர்கள் தானாம்!

பெரிய பொறுப்புக்கும் பதவிக்கும் போய்விட்டவர் களென்றால் அவர்கள் இந்த நாட்டுச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களா? பதவி என்ற நாற்காலியின்மீது ஏறிவிட்ட ஒரே ஒரு காரணத்துக்காக அவர்கள் செய்கிற குற்றங்களனைத்தும் சட்டத்தைக் குருடாக்கி நீதிமன்றங்களை முடமாக்கிவிடவேண்டுமா?

காஷ்மீரி பார்ப்பன அம்மையார்

பழங்காலத்தில்தான் இந்த புண்ணியபாரத பூமியில் மனுதர்ம ஆட்சி நடைபெற்றது. பார்ப்பான் என்ன குற்றம் செய்தாலும் அதுபற்றி விசாரணை நடத்தக் கூடாது. வழக்குத் தொடரக்கூடாது; தண்டனை வழங்கக்கூடாது அப்படி வழங்கினாலும் லேசான தண்டனை மட்டும் தரவேண்டுமென்று மனுதர்மம் கூறும்' அதையே ஆட்சியின் சட்டவிதிகளும் தலையாட்டி ஆமோதிக்கும்.

இந்த நாட்டை ஆளுவது ஒரு காஷ்மீரி பார்ப்பன அம்மையார் என்பதற்காக அவர் செய்ததாக சந்தேகப் படும். அவர் சம்பந்தப்பட்டதாக சந்தேகப்படும் ஒரு குற்றம்பற்றி விசாரணை உருப்படியாக நடத்தக் கூடாது என்றால் இங்கே, இப்போது நடப்பதும். மனுதர்ம ஆட்சிதானா?

சீசரின் மனைவியரின் யோக்கியதை என்ன?

பிரதமர் என்பவரும் பிற பொது வாழ்வின் சிறப்பி டங்களை அலங்கரிப்பவர்களும் ஒழுக்கத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பது ஒரு அழகான ஆங்கிலச் சொற்றொடர் வாயிலாக விளக்கப்படுகிறது. 'சீசரின் மனைவி சந்தேககத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும்'' என்பது இந்தச் சொற்றொடர் ''சீசரின் மனைவிக்கும் **ஸ்ரீ**மான் சி **எஸ்** க்கும் மிகவும் உறவு உண்டு.

சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவராக பிரதமர் இருக்க வேண்டும்; அப்படியே சந்தேகம் கிளம்பிவிட்டது என் றால் பின்னர் அந்த சந்தேகம் பரிபூரணமாக நிவர்த்தி செய்யப்பட்டுவிடவேண்டும். இல்லையென்றால் சந் தேகம் சந்தேகமே !

மொட்டைத்தாதன் பாணியில் புகார்

பிரதமர் இந்திரா ஏதோ பொதுவாழ்க்கையில் ஊழல் கறைபடியாத தூய பாத்திரம் என்று வாய் மணக்கப் பேசும் ஆசாமிகளைக் கேட்கிறோம் நகர் வாலா வழக்கில் பிரதமரின் யோக்கியதை இப்படி நாற்ற மடிப்பது உங்கள் மூக்குகளிலே உறைக்கவில்லையா?

''இங்கே ஊழல்—அங்கே ஊழல்'; என்று பொறுப் பற்ற முறையில்—ஆதாரம் எதுவுமற்ற ''மொட்டைத் தாதன்'' பாணியில் இங்கேசில மாரிக்காலத்தவளைகள் இராகம் பாடுகின்றனவே; அந்தத்தவளைத் தொண் டைத்தலைவர்களையே கேட்கிறோம். பிரதமரின் யோக்கியதை இப்படி 60 லட்சங்களையும் இரண்டு பிணங்களையுமா சுற்றிச் சுற்றி வரவேண்டும்?

உண்மை ஒருபோதும் உறங்காது

இந்திராவின் பெருமை இப்படி போய்க்கொண்டி ருக்கும்போது, அதே இந்திராவுக்குப் பல்லக்குத்தூக்கிப்

பிழைக்கும் எடுபிடிகள் இங்கே ஊழல் முகாரியைப் பாடுவது எத்தனை பெரிய பித்தலாட்டம்?

இந்திராவுக்கு பாராளுமன்றத்திலேகிடைத்திருக்கும் "ரோடு ரோலர்" மெஜாரிட்டி காரணமாக அந்த ஜன நாயக அரங்கிலே எதிர்க் கட்சிகளின் குரல் வளையை நெரித்துவிடலாம். ஆனால் மக்கள்மன்றம் சும்மா இருக்குமா?

இந்திராவுக்கு மக்கள் மத்தியிலே கிடைத்திருக்கும் பாமரத்தனமான செல்வாக்கு காரணமாக அரசியல் களங்களில் இருந்துகூட இந்த இருட்டு வேலைக்கு திரை போட்டு மறைத்துவிடலாம் என்ற நினைப்பு நப்பாசையே!

ஆனால், உண்மை உறங்காது; ஒருபோதும் உறங்காது நகர்வாலா வழக்கின் உண்மைதான் என்ன?

2. ஹலோ, நான்தான் இந்திரா பேசுகிறேன்

1971 ஆம் ஆண்டு மே மாதம் 24-ந் தேதி முற்பகல் வேளை, இந்த சுபயோக சுபமுகூர்த்தத்தில் என்ன நடந்தது தெரியுமா?

புதுடில்லி நகரம்! இந்தியாவின் இந்த நாட்டின் தலைநகரம். அந்தத்தலைநகரத்திலும் தலையாய இடம் பாராளுமன்றத் தெரு, அந்தத் தெருவிலுள்ள ஸ்டேட் பாங்கு ஆப் இந்தியா கிளை.

பிரதமரின் செக்கை செல்லுபடியாக்கவா?

பரபரப்பான அலுவல்! அதன் மத்தியில் அந்த பாங்கின் பிரதம காஷியர் வி. பி. மல்ஹோத்ரா என்பவருக்கு ஒரு டெலிபோன் வருகிறது. அவர் பேசுகிறார்

அடுத்த முனையில் அவருடன் பேசுவதுபிரதமர் திருமதி இந்திராகாந்தியின் குரல்? அல்லது அதுபோன்றதாம்!

மல்ஹோத்ராவுடன் பிரதமர் டெலிபோனில் பேச வேண்டிய அவசரம் என்ன வந்தது? அந்த ஆசாமி பிரதமருக்கு உறவுக்காரரா? குடும்ப விஷயம் பேச அவசரமாக டெலிபோனில் தொடர்பு கொண்டாரா பிரதமர்? இல்லை.

பிரதமர் அந்த பாங்கிலே சொந்தக் கணக்கு வைத்திருந்து அதிலே இருப்புப்பணம் இல்லாதபோது பிரதமர் வேறு யாருக்கேனும் 'செக்' கொடுத்துவிட்டு அது செல்லுபடியாகிவிடக்கூடாதே என்று பயந்து டெலி போனில் பேசி சரிகட்டினாரா? இருக்கமுடியாதே ஏனென்றால் அப்படியொரு அதிகாரம் உலகின் எந்த நாட்டு பாங்கிலும் பிரதம காஷியருக்கு இல்லையே. ஏஜெண்டுக்கல்லவா இத்தகைய அதிகாரம் இருக்கிறது.

ரகசியமான காரியம் ரூ. 60 லட்சம் கொடு

பின் ஏன் டெலிபோனில் பிரதமர் பேசினார்? ஏதேனும் அரசியல் ரகசியங்களைப் பரிமாறிக் கொள்ளவா? அல்லது தேசத்தின் 'தலைவிதி'யை நிர்ணயிக்கும் ராஜதந்திரக் காரியம் ஏதேனும் அந்த பாங்கு அதிகாரிமூலம் ஆகவேண்டியதிருந்ததா?

ஆம்! அப்படித்தான் பிரதமர் டெலிபோனில் கூறினாராம்! 'வங்கதேச விஷயமாக ஒரு காரியம் நடத்தப் படவேண்டும்; அதற்காக உடனடியாக ரூ. 60 லட்சம் கொடுத்து அனுப்புங்கள் நமது ஆள் நகர்வாலா அங்கே உங்கள் பாங்கிலேயே காத்திருக்கிறார் ஒரு Code வார்த்தை ரகசியச்சொல் கூறுவார் அவர்மூலம் அந்தத் தொகையை அனுப்புங்கள் அத்தனையும் நூறு ரூபாய் நோட்டாக இருக்கட்டும்'' என்றாராம் பிரதமர்.

பாங்குத்துறையின் பாலபாடம் தெரியுமா

பிரதமர் கூறியது மட்டுமல்ல, பிரதமரின் 'உயிர் நாடி' என்று அழைக்கப்படும் பி. என். ஹக்சார் வேறு பிரதம காஷியர் வி.பி. மல்ஹோத்ராவுடன்டெலிபோனில் பேசியிருக்கிறார் அவரும் இதே விஷயத்தையே கூறி இருக்கிறார். பிரதமர் கூறிவிட்டார் பிரதமரின் பிரைவேட் செக்கரேட்டரியான ஹக்சாரும்கூறிவிட்டார். அப்படியானால் பிறகு தடை என்ன ?

தடை ஒன்றா—இரண்டா? எத்தனையோ தடை இருக்கிறதே. பாங்குத்துறை பற்றிய பாலபாடம் தெரிந்தவர்களுக்குக்கூட இது புரியுமே, 60 லட்சத்தை விடுங்கள் ; 60 நயாபைசாகூட என்றால்கூட அதற்கு 'செக்' அல்லவா தேவை "அரிசி ஆழாக்கானாலும் அண்டைக்கல் மூன்று வேண்டும்" என்று பழமொழி உண்டு அதே போல தொகை ரூ. 60 லட்சம் என்றாலும் சரி, 60 காசு என்றாலும் சரி அதற்கு 'செக்' வேண்டும் இல்லையென்றால் சல்லிக்காசு பெயராது இது தான் பாங்குகளின் செயல்முறை.

விதிமுறைகளை விதிப்பவரே அவர்தான்

ஆனால் இங்கே இந்த நடைமுறை பின் பற்றப்படவில்லை, வெறும் டெலிபோனில் பணப்பற்று வரவு வைப்பது பாங்குத் துறையில் கனவிலும் காணமுடியாத ஒரு விஷயம் ஆனால் அது நடைபெற்றிருக்கிறது. பிரதமர் இந்தீராவின் பெயரால்.

பிரதமர் பாங்கிங் விதிமுறைகள் தெரியாத தற்குறி என்று நாம் கூறமுடியுமா? விதிமுறைகளை விதிப்பவரே அவரல்லவா? அப்படிப்பட்ட அம்மையாரே டெலிபோனில் பேசியே பணம் பட்டுவாடா செய்ய வைக்கிறார் என்றால் அது பாங்கின் ஊழியர்களின் தவறு என்று யாரும் கூறமாட்டார்கள். தவறு நூற்றுக்கு நூறு பிரதமர் இந்திராவினுடையது என்றுதான் அனைவரும் ஒருமித்த குரலில் கூறுவார்கள்.

நான்சென்ஸ்! நான் எங்கே பேசினேன்

ஆனால் பிரதமர் இந்திரா இதற்கு வெகு அழகான ஒரு பதிலைத் தயாராக வைத்திருப்பார், "பேசியது நானா? நான்சென்ஸ்! நானாவது பாங்கு பிரதம காஷியரிடம் டெலிபோனில் பேசி நகர்வாலாவுக்கு பணம் கொடுக்கச் சொன்னதாவது! எல்லாம் மோசடி!" என்று பிரதமர் 'சட்' என்று பதில் கூறுவார். அந்தப் பதிலில் எத்தனை பெரிய மோசடி அடங்கிக் கிடக்கிறது என்பது விஷயம் புரிந்தவர்களுக்கு வெட்ட வெளிச்சம்.

3. பிரதமர் இந்திராவுக்கு ஒரே ஒரு கேள்வி

டெலிபோனில் பேசியவர் பிரதமராக இல்லாமல் இருந்திருந்தால் பிரதம காஷியர் என்ன செய்திருப்பார்? உடனே தமது பியூனை அனுப்பி, வெளியே பணத்துக்காக காத்திருக்கும் நகர்வாலாவைத் தம் அருகே அழைத்து உபசாரம் நடத்தியிருப்பார்; உபசரிப்பது போல நடித்தாவது இருப்பார் இதற்குள் போலீசுக்கும் தகவல் சொல்லியனுப்பியிருப்பார்.

இந்திரா கூஜாக்களுக்கு நமது சவால்

போலீஸ் வந்ததும் நகர்வாலா கைது செய்யப்பட்டிருப்பார். "பிரதமரின் பெயரால் மோசடி செய்ய முயன்ற பலே ஆசாமி கைது" என்று பத்திரிகைகளில் செய்தி அமளி துமளி பட்டிருக்கும் இந்த மோசடிப் பேர் வழியைப் பிடிப்பதற்கு வசதியாக சாதுரியமாகவும் குயுக்தியாகவும் நடந்து கொண்ட பாங்கு காஷியர் மல்ஹோத்ராவுக்கும் பாராட்டுகள் வந்து குவிந்திருக்கும்.

மல்ஹோத்ரா அப்படிச் செய்யாமல் சொன்ன தொகையை உடனே எண்ணிக்கொடுத்து அனுப்பியது ஏன்?— இந்த ஒரே ஒரு கேள்விக்கு விடை கூறும்

திராணி பிரதமர் இந்திராவுக்கும் அவர் தம் தரகர்களுக்கும் உண்டா? நாம் சவால் விட்டுக் கேட்க விரும்புகிறோம். இந்திரா தவிர உலகில் உள்ள பிற அரசியல்வாதிகள் அனைவருமே ஊழலில் ஊறியவர்கள் என்று உளறித்திரியும் மனிதர்கள் இதற்குக் கூறும் பதில் என்ன?

'செக்' என்பது தொடக்கூடாத பொருளா?

இப்படி மல்ஹோத்ரா நடந்துகொண்டதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கமுடியும். பிரதமர் இந்திரா மல்ஹோத்ராவுக்கு அடிக்கடி டெலிபோன் செய்வார். அப்படி டெலிபோன் செய்யும் போதெல்லாம் சில பல லட்சங்களைச் சில பல மனிதர்களுக்கு வழங்கும்படி உத்தரவிடுவார் என்பதுதானே உண்மைக் காரணம்? இல்லையென்றால் போலீசிடம் நகர்வாலாவை ஒப்படைப்பதற்குப் பதிலாக நகர்வாலாவிடம் லட்சங்களை ஒப்படைப்பாரா?

சரி, பிரதமரின் செயல்திறனை இத்துடன் நிறுத்தி விட்டு இந்த மல்ஹோத்ரா என்ற பிரதம காஷியரின் யோக்கியதையையும் சற்று நாம் யோசித்துப் பார்ப்போம் ஒருவன் பாங்குகணக்கில் இருந்து இன்னொருவருக்கு பணம் வழங்கப்படுகிறது என்றால் வெறும்டெலிபோன் மட்டும் போதுமா 'செக்' என்ற பொருளைப் பயன் படுத்தவே கூடாது என்று பிடிவாதமாக இருக்கும் தூய்மையாளரா இந்த மல்ஹோத்ரா? 'செக்' இல்லாமல் பணம் வழங்கும் நடைமுறையை மல்ஹோத்ரா கடைப்பிடித்தது ஏன்?

ரிஷிப்பிண்டம் இராத்தங்காது

முறைப்படியான பாங்குக் கணக்கில் இருந்து பணம் எடுக்கவேண்டும் என்றால்தான் இந்த மாதிரி பிற்போக்குத்தனமான 'செக்' விவகாரம் எல்லாம் பாங்கின் பேரேட்டில் கணக்கு இருந்தால்தானே 'செக்' என்றும்

'வில்லை' என்றும் 'கியூ' என்றும் கவுண்டர் என்று தடைகள் பலவற்றைத் தாண்டவேண்டும்.

'ரிஷிப்பிண்டம் இராத்தங்காது என்பார்கள் அதாவது, ரிஷிகள் ஏதாவது ஒரு பெண்ணுடன் கூடினால் அதன் விளைவாக உற்பத்தியாகும் கரு இரவு நேரம் வரும்வரைகூட வயிற்றில் தங்கியிருக்காதாம் அதற்கு முன்பே பூரண வளர்ச்சி பெற்ற பிள்ளையாக சுகப்பிரசவம் அடைந்து விடுமாம்—நமது புராணங்களின் புளுகு இது, இதே புராணப் புளுகுதான் நகர்வாலா விஷயத்திலும் நடந்திருக்கிறது.

மாமூல் நந்திகள் வழிமறிக்கவில்லை?

மனிதப் பிண்டத்துக்குத்தான் செக், இருப்பு, கையெழுத்து, வில்லை என்ற மாமூல் நந்திகள், நகர் வாலா கதை ரிஷிப்பிண்டம் என்பதால் இவை எதுவும் தேவை இல்லை போலும், இந்த வழக்கில் நகர்வாலா வுக்குச் சமமான அளவு பொறுப்பு உள்ளவர் பிரதம காஷியர் மல்ஹோத்ரா என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

சரி, பிரதமர் இந்திராவே டெலிபோன் செய்தார் என்று வைத்துக் கொள்வோம் மல்ஹோத்ராவுக்கும் பிரதமரின் ரகசியக்கணக்குக்கும் சம்பந்தம் உண்டு என் பதையும் விவாதத்துக்காக ஒப்புக்கொள்வோம் (உண்மைக்காகவும் தான் நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்) நகர்வாலா என்பவர் இப்படிப்பட்ட கணக்கில் சேராத கருப்புப் பண பரிமாற்றங்களில் முக்கியப் பொறுப்பு வகிப்பவர் என்பதையும் ஒப்புக் கொள்வோம்.

மர்மவழக்கின் பிரதான பிரச்னை

இதை யெல்லாம் ஒப்புக் கொண்டபின் ஒரு சந்தேகம் ஒரு குறுக்குக் கேள்வி நகர்வாலாவிடம் வழங்கப்பட்ட பணத்தை மீட்க மல்ஹோத்ரா ஏன் போலீ

சில் புகார் செய்தார் இது தான் இந்த மர்ம வழக்கின் பிரதானமான பிரச்னை.

இந்த நகர்வாலா ஓர் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி காப்டன் அந்தஸ்தில் பணியாற்றியவர். இவர் பிரதம காஷியர் மல்ஹோத்ராவை அறிந்த ஆசாமிதான், பிரதமரிடமே இருந்து டெலிபோன் வந்த பிறகும் கூட, பிரதமரின் செயலாளரான ஹக்சாரும் இந்த நகர்வாலா பற்றியும் அவருக்கு ரூ 60 லட்சம் ரொக்கம் கொடுக்கும் படி பிரதமர் ஏற்பாடு செய்திருப்பது பற்றி கூறிய பிறகும் கூட, இந்த ஆணைகளுக்கு இணங்க ரொக்கப் பணமாக ரூ. 60 லட்சம் நகர்வாலாவிடம் வழங்கப்பட்ட பிறகும் கூட அந்தப் பணத்தை அவரிடம் இருந்து பறிக்கும்படி போலீசில் புகார் கொடுக்கப்பட்டது ஏன்? இதன் நுட்பம் புரிந்து விட்டால் இந்த மோசடியின் முழு உருவமும் பல்லை இளித்துவிடும்.

இதுவரைக்கும் யாரும் மறுக்கவில்லை

இந்த நுட்பத்தை நாம் புரிந்துகொள்ள உதவியாக இருப்பவை ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஆதாரங்கள் அனைத்தும் சர்வவல்மைமிக்க இந்திராகாந்தியின் அரசிடம் சிக்கிக்கிடக்கும் போது நாம் என்ன ஆதாரம் திரட்டிவிட முடியும்? என்றாலும் டில்லியில் இருந்து வெளிவரும் "மதர்லாண்ட்" என்ற ஆங்கில நாளேடு வெளியிட்ட ஒரு செய்தி ஒன்று இருட்டில் ஒளி விளக்காய் நின்று நிலவுகிறது.

இந்தப் பத்திரிகை கடந்த ஜூன் மாதம் ஒரு நாள் இந்த மோசடி பற்றி நீண்ட செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது அந்தக்கட்டுரை வெளியாகி இத்தனை நாளாகியும் கூட அதை மறுத்து பிரதமரோ அவரது செயலாளர் ஹக்சாரோ அல்லது ஸ்டேட் பாங்கு பிரதம காஷியர் மல்ஹோத்ராவோ அல்லது இந்திய அரசோ ஒரு அறிக்கை கூட தரவில்லை ஒரு பேட்டியில் கூட இது விஷயம்பற்றி வாய்திறக்கவே இல்லை குற்ற

வாளிகள் மறுக்காத வரை குற்றம் குற்றமேதான் என்ற வாதம் வலியுறுத்தப்பட்டு நிற்கிறது என்பது தானே பொருள்.

'மதர்லாண்டி''ன் செய்தியில் கூறப்பட்டிருப்பது என்ன ?

4. திருடனுக்குத்தேள் கொட்டினால்...

'மதர்லாண்ட்' கூறுகிறது :—

1971 மே மாதம் 24ந் தேதியன்று காலையில் ஸ்டேட் பாங்கின் பார்லிமெண்ட் தெரு கிளையின் பிரதம காஷியரான மல்ஹோத்ராவுடன் பிரதமர் திருமதி இந்திராவும் அவரது செயலாளர் ஹாக்சாரும் டெலி போனில் பேசியது உண்மை.

சங்கேத மொழிக்கு ரூ. 60 லட்சம்

இந்த பாங்கு கிளையில் இருந்து பணம் இப்படிப் பட்ட வகையில் பரிமாற்றம் செய்யப்படுவது என்றால் அதற்கு பிரதம காஷியர் மட்டத்தில் ஏற்பாடு செய்யப் படுவது வழக்கம்; ஒரு முனையில் பிரதம காஷியர். அடுத்த முனையில் பிரதமர் அல்லது பிரதமரின் செய லாளரான ஹக்சார் இவர்கள் இருவரும் ஒரு முனையில் இருக்க மறு முனையில் இருப்பவர் மல்ஹோத்ரா தான். அவர்கள் இருவரும் கூறியனுப்பும் ரகசியத்தொடர்பு மொழி (குழுக்குறி) இங்கே இவர் ஒருவருக்குத்தான் தெரியும் எந்த காமா—சோமாப்பயல் வந்து அந்த சங்கேத மொழியைச் (குழுக்குறி) சொன்னாலும் போதும், குறிப்பிட்ட தொகையை மறுபேச்சில்லாமல் எண்ணி. வந்தவனிடம் கொடுத்தனுப்புவதுதான் பிரதம காஷியர் மல்ஹோத்ராவின் ரகசியக் கடமை இப்படி வரும் இடைத்தரகர்கள் யார் ?—இது ஒரு சுவையான ஆராய்ச்சி.

துப்பறியும் பகுதியில் டிரைவர் பதவி

இத்தகைய ரகசியப் பணிகளில் நகர்வாலா ஏற்கெனவே ஈடுபட்டவர்தாம். இத்தகைய மர்ம வேலைகளில் ஈடுபடத்தான் நகர்வாலா சிறப்புப் பயிற்சி பெற்றுவந்தார். நகர்வாலா பிரதமரின் இலாகாவில் உள்ள துப்பறியும் ரகசியப் போலீசில் பணியாற்றி வந்தாராம். இவரது தொழில் பிரதமருக்கு இது போன்ற விஷயங்களில் உதவி செய்வது. இப்படி உதவி செய்ய வசதியாக 'டிரைவர்' என்று ஒரு பதவி பிரதமரின் அலுவலகத்தின் துப்பறியும் பிரிவில் போட்டுத்தரப் பட்டது. 'டிரைவர், என்பதே அவரது பதவிக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்படையான பெயர், ஆனால் நகர்வாலா அதைவிடப் பெரிய பொறுப்பில் வைக்கப் பட்டிருந்தார்.

மல்ஹோத்ராவிடம் அடிக்கடி பிரதமரோ அவரது செயலானரான ஹக்சாரோ பேசுவார்கள் அதன்பின் "குழூக்குறி" அறிந்தநபர் ஒருவர் பிரதமரின் அலுவலகத்துக்கு போவார். அவர் மல்ஹோத்ராவிடம் 'கோடு' (Code) வார்த்தையான குழூக்குறியைக் கூறுவார். உடனே மல்ஹோத்ரா பல லட்சம் அடங்கிய ஒரு தொகையைக் கொடுப்பார், வந்தவர் புறப்பட்டுப் போவார் அப்படி வரும் நபர்களுடன் டிரைவர் என்ற அடிப்படையில் நகர்வாலாவும் ஸ்டேட் பாங்குக்குவருவது வழக்கம்.

முன்கூட்டியே உளறி விட்டார்

அன்றும் அப்படியேதான் நடந்தது. ஒரே ஒரு மாற்றம் "குமுக்குறி"யுடன் பணம் வாங்கவந்த ஆசாமி தமது "குழூக்குறியை" டிரைவர் நகர்வாலாவிடம் முன் கூட்டியே உளறிவிட்டார் இந்தக் 'குழூக்குறி'ச் சொல்லைப் பயன்படுத்தி ஏன் நாமே ரூ. 60 லட்சத்தையும் அடைந்தால் என்ன என்று நகர்வாலா நாக்கிலே எச்சில் ஊறியது.

“ குழுக்குறி ”யுடன் வந்த மனிதர் கொஞ்சகால தாமதம் செய்து பின் பாங்குக்கு வரவேண்டியதிருந்தது அதற்கு முன் நாமே போய் மல்ஹோத்ராவிடம் “ குழுக் குறியை ”க் கூறி பணத்தைப் பெற்றுக்கொண்டு எங்காவது கம்பி நீட்டிவிட்டால் என்ன—என்று நகர் வாலா சிந்திக்கலானார் உடனே அதைச் செயல்படுத் தவும் முனைந்தார்.

ஒரு சொல்லைச் சொன்னதும் லட்சாதிபதி ஆனார்

பிரதமரின் அலுவலகத்தைச் சேர்ந்த குழுக் குறி நபர் வரும்முன் நகர்வாலா அந்த பாங்குக்கு விரைந்தார் தனது நண்பர் கூறிய குழுக்குறியை மல்ஹோத்ராவிடம் கூறினார் பணத்தை எண்ணித் தயாராக வைத்திருந்த மல்ஹோத்ரா உடனே பணத்தை நகர்வாலாவிடம் கொடுத்து விட்டார் இவர் பேசிய குழுக்குறி இவரை நிஜமான தூதனாகக் காட்டியது !

சாதாரண நகர்வாலா—ராணுவத்தின் ஓய்வுபெற்ற காப்டன் நகர்வாலா—இந்த ஒரே ஒரு ‘குழுக்குறியை உச்சரித்த மாத்திரத்தில் லட்சாதிபதி ஆகிவிட்டார் ஒரு லட்சமல்ல ; இருலட்சமல்ல ; 60 லட்ச ருபாய் ! திருட் டுத்தனமாகப் பெற்ற இந்தப் பணத்தைக் கொண்டு நகர்வாலா மறு நிமிஷமே இந்தியாவை விட்டு வெளியேறி யிருக்கலாம் அப்படி அவர் செய்யவில்லை தலைமறை வாகி டில்லியை விட்டு அந்தர் தியானமாகி இருக்க லாம் அப்படியும் அவர் நடக்கவில்லை இது வினோத மாக இருக்கும் மேலெழுந்தவாரியாகப் பார்ப்போருக்கு ! ஆனால் சற்று ஆழமாகப் பார்த்தால் இதன் உண்மை புரியும்.

திருடனுக்கு தேள் கொட்டிய கதையாகுமா ?

தம்மைப் போலீஸ் தேடும் என்றோ, தாம் மோசடி யாகப் பெற்ற ரூ. 60 லட்சம் பற்றிய விவரம் எல்லாம் பத்திரிகைகளிலே கொட்டை எழுத்துக்களில் பிரசுர

மாகும் என்றோ நகர்வாலா கனவிலும் கருதவில்லை. அவர் இதைவேறொரு மாதிரி கணக்குப் போட்டிருந் தார், "முறையான சம்பாத்தியம்மூலம் வந்த வெள்ளைப்பணம் என்றால் தானே இது பற்றி அவர் களால் போலீசில் புகார் செய்ய முடியும் ஆனால் இது தான் கள்ளக் கணக்கில் உள்ள கருப்புப் பணமாயிற்றே இதை நாம் எடுத்துக்கொண்டு கம்பி நீட்டியது என்பது அவர்களுக்கு "திருடனுக்குத் தேள் கொட்டியகதை" யாகத்தானே இருக்கும் அப்படியானால் அவர்கள் எப்படி போலீசில் புகார் செய்ய முடியும் என்று நகர் வாலா துணிச்சலாக இருந்தார் ஆனால்......

5. மூன்றே நாளில் முடிந்த விசாரணை நாடகம்!

இங்கேதான் நகர்வாலா ஏமாந்துவிட்டார். திருட னுக்குத் தேள் கொட்டியது உண்மைதான். இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்களோ சாதாரணத் திருடர்கள் அல்லவே; பாக்காத் திருடர்கள் போன் றவர்கள் அல்லவா? எனவே, தேள் கொட்டிவிட்டதை மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் திண்டாடவில்லை. அய்யோ தேள் கொட்டிவிட்டதே என்று உரத்த குரலில் கூக்குரலிட்டனர். ஆம், இந்த மோசடிபற்றி உடனே போலீசில் புகார் செய்யப்பட்டு விட்டது.

முழுவதுமாகக் குடிமுழுகிப் போய்விடவில்லை

இந்த மோசடி எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது? இதுவும் வெகு சுவையானது. நகர்வாலா பாங்குக்கு வருவதற்கு முன்பே டெலிபோனில் ரூ. 60 லட்சம் இன்றைக்குத் தேவை என்று தகவல் வந்ததும் பிரதம காஷியர் மல்ஹோத்ரா ரூ. 60 லட்சத்தைத் தனியாக எண்ணி எடுத்து தயாராக வைத்திருந்தார். நகர்வாலா வந்து கேட்டதும், 'குழூக்குறி'ச் சொல்லைச் சொன்ன தும் பணம் கைமாறியது.

இதற்குக் கொஞ்ச நேரம் கழித்துத்தான் உண்மையான தூதர் வந்தார். இவரும் மல்ஹோத்ராவிடம் வந்து சங்கேதச் சொல்லைக் கூறி, ரூ. 60 லட்சத்தையும் தருமாறு கேட்டார். பிறகுதான் புரிந்தது மல்ஹோத்ராவுக்கு! என்றாலும் இன்னமும் முழுவதுமாகக் குடி முழுகிப் போய்விடவில்லை. பணம் வாங்கிப் போனவர் முற்றிலும் அந்நியர் அல்லவே. டிரைவர் நகர்வாலா தானே. இவரும் பலமுறை மல்ஹோத்ராவிடம் வந்திருக்கிறாரே. பணம் வாங்கும் தூதராக இல்லாவிட்டாலும் டிரைவராக! எனவே, இனி என்ன செய்வது? மல்ஹோத்ரா மேலிடத்துப் பெரிய மனிதர்களுடன் டெலிபோனில் தொடர்புகொண்டார். மேலிடம் என்றால், தனது பாங்கின் மேலிடம் அல்ல; கருப்புப் பணக் கள்ளக்கணக்கு வைத்திருந்த அந்த மேலிடம்.

பெட்டிகூட இல்லாமல் பாங்குக்குப் போவாரா?

நகர்வாலாமீது போலீசில் புகார் செய்யும்படி மேலிடம் உத்தரவிட்டது. அதை அடுத்து பாங்கு சார்பில் போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீஸ் வேட்டையில் அன்றிரவே சிக்கிவிட்டார் நகர்வாலா. ஏனென்றால், அவர் முகமூடிக் கொள்ளைக் கும்பல் போலவோ, சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக் கூட்டம்போலவோ நடக்கவில்லை; நடக்கத் தேவை இல்லை என்று நம்பினார். இப்படி அவர் நம்பவில்லையென்றால்.........சரியான வாகன வசதியில்லாமல் பாங்குங்குப் போயிருக்கமாட்டார். ஏதோ ஒரு டாக்சியைப் பிடித்து எங்கெல்லாமோ சுற்றியலைந் திருக்கமாட்டார். அட அந்த ரூ. 60 லட்சத்தையும் பத்திரமாக வைத்துக்கொள்ள ஒரு பெட்டிகூட கொண்டு போகவில்லை நகர்வாலா. வழியில் எங்கோ ஒரு கடையில்தான் பெட்டி வாங்கியிருக்கிறார். அதோடு ரூ. 60 லட்சத்துக்குத் தாம் அதிபதி என்ற எண்ணமே அவரைப் புத்திபேதலிக்கச் செய்துவிட்டது. இல்லையென்றால், 20 ரூபாய் வாடகை கொடுக்க வேண்டியிருந்த டாக்சி டிரைவரிடம் ரூ. 200 அதாவது, 2 நூறு ரூபாய் நோட்டுக்களை வீசி எறிவாரா?

மாஜிஸ்திரேட் என்ன அசகாய சூரரா ?

ஆக, போலீசார் இலகுவாக, வெகு விரைவில் நகர்வாலாவைப் பிடித்துவிட்டார்கள். நகர்வாலாமீது வழக்குத் தொடரப்பட்டது. ரூ. 60 லட்சம் பெரிய தொகை என்பது ஒருபுறமிருக்கட்டும். இந்த விவகாரத்தில் பிரதமரின் பெயர் அடிபட்டுவிட்டதே, இது ஒன்றே போதும். இந்த வழக்கு விசாரணை முடிய நாளைந்து வருடங்களாவது ஆகுமே! ஆனால், என்ன வேகம் பாருங்கள்! டில்லி நகர மாஜிஸ்திரேட் கோர்ட் ஒன்றில் வழக்குப் பதிவாகியது. ஒருநாள், மறுநாள், அதற்கடுத்த நாள் ஆக மூன்றே மூன்று நாட்களில் வழக்கு விசாரிக்கப்பட்டு, தீர்ப்பும் வழங்கப்பட்டுவிட்டது! அந்த மாஜிஸ்திரேட் அசகாய சூரர் என்று பாராட்டுகிறீர்களா? அதுதான் இல்லை.

மனக்கோட்டை மணல் கோட்டை ஆகிவிட்டது

இதே மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தெரு முனையில் 'ஒன்றுக்கு' இருந்துவிட்ட வழக்கில், தலையாட்டி அபராதம் கட்ட மறுத்தவர்கள் மீதான வழக்குகள் நாட்கணக்கில், மாதக்கணக்கில் நடந்துவருகின்றன. இதேபோல நியூசென்ஸ் வழக்குகள், குழாயடிச் சண்டை, அடுக்களையில் நடந்த குடுமிபிடிச் சண்டை, வகையறாக்கள் எத்தனையோ வாய்தாக் கொடுத்தும் இம்மியும் நகராமல் சத்தியாகிரகம் செய்துவருகின்றன. ஆனால், இத்தனைப் பெரிய வழக்கு பிரதமரும், அவரது செயலாளர் ஹக்சாரும் இன்னும் எத்தனையோ 'படாபடா' பேர் வழிகள் எல்லாம் புதுடில்லி முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கே. பி. கன்னாவின் கோர்ட்டுக்கு நடையாக நடப்பார்கள்; சாட்சிக் கூண்டில் பிரதமரை ஏற்றி, வக்கீல்கள் கேள்விக் கணைகளால் துளைக்கப் போகிறார்கள்; அதைக் கண்டுகளிக்கப் போகிறோம் என்று மனக்கோட்டை கட்டியவர்களுக்கு அது மணல் கோட்டை ஆகியது. இந்த வழக்கை விசேஷ நிருபர்கள் வைத்து, செய்தியாக்கி, பத்திரிகை விற்பனையைப் பரபரப்பாக்க உயர்த்திவிடலாம் என்று நினைத்

தவர்களும் ஏமாந்து போனார்கள்; ஏமாறும்படிச் செய்துவிட்டார் மாஜிஸ்திரேட் கன்னா! இல்லை, இல்லை அந்த மேலிடம்!!

2 வருடம் கடுங்காவல், ரூ. 2000 அபராதம்

மூன்றே நாள் விசாரணை; மூன்றாம் நாளே தீர்ப்பு! சாட்சி, சடங்கு, சம்பிரதாயம் எல்லாம் குப்பைக் கூடையில் வீசப்பட்டன. புரட்சிகரமான மனிதர்கள், தலைவர்கள் பின்னணியில் இருக்கிறார்கள் அல்லவா ? இவர்கள் சாதாரண மனிதர்களைப் போன்ற கோர்ட் சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்க முடியுமா?

நகர்வாலா குற்றவாளி. அவர்மீது சுமத்தப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுகளும் சந்தேகமற நிரூபிக்கப் பட்டுவிட்டன. ஆள் மாறாட்டம் செய்த குற்றத் துக்காக இரண்டு வருடம் கடுங்காவல் தண்டனை; ஏமாற்றியதற்காக இரண்டு வருடம் கடுங்காவல் தண்டனை. இரு தண்டனைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டும். இந்தச் சிறைத்தண்டனை போக ரூ. 2000 அபராதம். இந்த அபராதத்தைக் கட்டத் தவறினால் மேலும் ஆறுமாத கடுங்காவல் தண்டனை—இவ்வாறு நகர்வாலாவுக்குத் தீர்ப்பு கூறப் பட்டது.

இவ்வாறு கூறப்பட்ட தீர்ப்புக்கு இணங்க, நகர் வாலா புதுடில்லியின் திகார் சிறையில் அடைக்கப் பட்டார். குறைந்த பட்சம் இரண்டு வருடத்துக்கு நிம்மதி என்று மேலிடத்தவர்கள் மூச்சுவிட்டார்கள். ஆனால், அந்த நிம்மதி 2 நாள்கூட நிலைக்கவில்லை.

6. வழக்கிலே பெரிய ஓட்டை; அதிலே ஒரு சிறிய வெடி !

நகர்வாலா மீதான குற்றச்சாட்டுக்கள் இரண்டு. முதல் குற்றச்சாட்டு: ஏமாற்றினார்—மோசடி செய்

தார் என்பது. ஆங்கிலத்தில், Cheating என்று குற்றப் பத்திரிகை கூறுகிறது. அப்படியானால், யாரை மோசடி செய்தார்? பாங்கை மோசடி செய்தார் என்று கூறுகின்றன. கோர்ட் மற்றும் போலீஸ் தஸ்தாவேஜுகள். இதை அடிப்படையாக, ஆதாரமாகக் கொண்டு தான் கோர்ட்டில் தீர்ப்புக் கூறப்பட்டது.

துப்பறியும் புலிகள் கண்ட புதிய உண்மையா ?

பாங்கை—ஸ்டேட் பாங்கு ஆப் இந்தியாவின் புதுடில்லி, பாராளுமன்றத் தெரு கிளையின் பணத்தை மோசடி செய்தார் என்பது உண்மை என்று வைத்துக் கொள்வோம் (வாதத்துக்காக). அப்படியானால், பாராளுமன்றத்திலே சவான் இதற்கு முரண்பட்ட கருத்தைக் கூறுவானேன்? ஒருவேளை கோர்ட்டிலே தீர்ப்புக் கூறப்பட்ட பிறகு, துப்பறியும் புலிகள் கண்டு பிடித்த புதிய உண்மை பாராளுமன்றத்திலே கூறினாரோ சவான்!

அதுவும் இல்லை. ஏனென்றால், சவான் சொன்னது 1971 மே மாதம் 26ந் தேதி. ஆனால், தீர்ப்புக் கூறப் பட்டதோ 1971 மே மாதம் 27ந் தேதி. அதாவது, சவான் மேற்கண்டவாறு கூறிய பின்னர், 24 மணி நேரம் கழித்தே தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது.

சுக்கல் நூறாக சிதறி யிருக்குமாம்

ஆமாம், இப்படிப்பட்ட பெரிய ஓட்டை ஒன்று தம் வழக்கில் வீழ்ந்திருக்கிறது; போலீசார் விட்டு விட்டு இந்த ஓட்டையிலே வாதம் என்ற 'டைனமைட்' வெடியை வைத்துக் கொளுத்தினால் வழக்கு சுக்கு நூறாக சிதறி விழுந்துவிடுமே, வழக்கு மட்டுமா? வழக்கின் சாரலில் மறைந்து வாழும் அந்த மேலிடத்து அரசியல் தலைவர்களின் முகமூடியும் அல்லவா கிழிந்து பஞ்சு பஞ்சாகப் பறந்திருக்குமே.

அட, நகர்வாலாதான் குழப்பத்தில் மூழ்கிக் கிடந்திருப்பாரே; அவர் இந்தப் பாயிண்டைப் பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாமா?—இப்படிக் கேட்கலாம்! அதோடு பாராளுமன்றத்திலே சவான் சொன்னது பத்திரிகைகளிலே வந்திருக்கும். அதைப் படிக்க நகர்வாலா நம்மைப்போல் சுதந்திரப் பறவையாகவா இருந்தார்? இல்லையே; சிறையில் அல்லவா தள்ளப்பட்டிருந்தார். பாராளுமன்ற நடவடிக்கைகளும், பத்திரிகை செய்திகளும் நகர்வாலாவுக்கு இருட்டடிப்பு ஆயிற்றே.

இதைக் கண்டால் உலகம் சிரிக்காதா?

இது சரி, நகர்வாலாவுக்குத்தான் இது இருட்டடிப்பு; நகர்வாலாவின் வக்கீலுக்கு இந்த ஓட்டை தட்டுப்படாமலா போயிற்று?—சரியான கேள்விதான். ஆனால், ஒரு அடிப்படைக் கோளாறு இந்தக் கேள்வியில் இருக்கிறதே. நகர்வாலாவுக்கு வக்கீலே கிடையாதே! இது வேதனையான உண்மை! இதுதான் இந்திய நீதி மன்றங்களின் நிலைமை என்றால், இதுதான் இந்தியாவின் சட்ட ஆட்சி (Rule of Law) என்றால், இதைக் கண்டு உலகம் சிரிக்காதா? ஜனநாயகமும், சம உரிமையும் தூக்குப் போட்டுக்கொண்டு சாகாதா?

அப்படியானால், நகர்வாலா வழக்கு விசாரணை எப்படித்தான் நடந்தது? இதைத் தெரிந்துகொள்ள நாம் டில்லி செசன்ஸ் கோர்ட்டில் நகர்வாலா சார்பில் அவரது வக்கீல் மகேஸ்வரி தாக்கல் செய்த ஜாமீன் மனுவையும் மறுவிசாரணை மனுவையும் புரட்டிப் பார்க்கவேண்டும்.

போலீசார் சொல்லச் சொல்ல நகர்வாலா எழுதினார்

"போலீசார் சொல்லக் கேட்டு நகர்வாலாவால் எழுதப்பட்டதுதான் அவரது ஒப்புதல் வாக்குமூலம். நகர்வாலாவே திட்டமிட்டு, சிந்தித்து, மனப்பூர்வமாக

எழுதியது அல்ல. நாங்கள் சொன்னபடி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால், உம்மை வழக்கில் இருந்து விடுதலை செய்துவிடுவார்கள்; இல்லையேல் சிறையிலே தள்ளிவிடுவார்கள் என்று போலீஸ் மிரட்டியது''— இவ்வாறு இம்மனுக்களில் கூறியிருக்கிறார் நகர்வாலா.

இதை வரிக்கு வரி நாம் நம்பித்தான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தம் இல்லை. ஏனென்றால், போலீசின் மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டைக் கூறாத குற்ற வாளிகளே உலகில் இருக்கமாட்டார்கள். ஆனால், இதைத் தொடர்ந்து இம்மனுக்களில் கூறப்பட் டிருப்பவை மிகவும் முக்கியமான தகவல்கள் ஆகும்.

தர்ம வக்கீல் ஏன் ஏற்பாடு செய்யவில்லை ?

''குற்றப் பத்திரிகையின் நகல் நகர்வாலாவுக்குக் கொடுக்கப்படவே இல்லை. தம்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றங்களைப் படித்துப் பார்த்து மனத்தை அவற்றின் மீது செலுத்தவும் விடப்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக வக்கீல் வைத்துக்கொள்ள நகர்வாலா அனுமதிக் கப்படவில்லை''—இது எத்தனை கொடுமையான விஷயம்.

நகர்வாலா வக்கீல் வைத்துக்கொள்ளக்கூட வசதி யற்ற அனாதையாக இருக்கலாம் ; அன்றாடங்காய்ச்சி யாக இருக்கலாம். ஆனால், அவருக்குத் 'தர்மவக்கீல்' ஏற்பாடு செய்துகொடுக்க மாஜிஸ்திரேட் ஏன் ஏற்பாடு செய்யவில்லை ? இது என்ன நியூசென்ஸ் வழக்கா ? இரண்டு வருடம், மேலும் இரண்டு வருடம் என்று நாலுவருட சிறைத்தண்டனை வழங்கப்படக்கூடிய அத்தனைப் பெரிய வழக்காயிற்றே. வக்கீலே இல்லாமல் இத்தகைய வழக்கை முடிப்பது நியாயமா ?

7. என்னோடு பேசியது சாட்சாத் பிரதமரேதான்

அதோடு வழக்கில் சம்பந்தப்பட்டவர்களாகக் கருதப்படும் பெரிய புள்ளிகளின் நிலை என்ன என்

பதைத் தெளிவுபடுத்தவாவது வக்கீல் ஏற்பாடு செய்திருக்கலாமே மாஜிஸ்திரேட் அதோடு. வழக்கு விசாரணை நடந்துகொண்டுருக்கும்போதே பாராளுமன்றத்தில் இந்த வழக்கு பற்றிய விவகாரம் விளக்கப்படுகிறது என்றால் அதைப்படித்துப்பார்த்து, எடைபோட்டு உண்மை—'பொய்யைப் பிரித்துக்காண மாஜிஸ்திரேட் முயன்றிருக்கவேண்டுமே!

போலீஸ் பிடித்தால் உடனடி சிறைதானா?

"அப்படிக்கில்லாமல் குற்றவாளியே குற்றத்தை ஒப்புக்கொண்டது ஒன்றேபோதும்" என்று காரணம் காட்டி நகர்வாலா வழக்கில் மாஜிஸ்திரேட் தீர்ப்பு எழுதிவிட்டாரே! இப்படித்தான் தீர்ப்பு எழுதப் படவேண்டும் என்றால் இனி தெருவில் நடந்து போய்க்கொண்டிருக்கும் யாரையும போலீசார் பிடித்துப் போய் மிரட்டி கோர்ட்டிலே ஒப்புதல் வாக்கு மூலம் கொடுக்கவைத்து உடனே சிறையில் தள்ளுவது என்பது அன்றாட நிகழ்ச்சியாக ஆகிவிடுமே.

ஜாமீன் மனுவிலும் மறு விசாரணை மனுவிலும் நகர்வாலா சார்பில் கூறப்பட்ட கருத்துக்களை செஷன்ஸ் நீதிபதி அப்படியே ஏற்றுத்தான் ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிட்டார் மறுவிசாரணைக்கும் உத்தரவிட்டார். எனவே, மேற்கண்ட சமாச்சாரங்கள் உண்மை முழுக்க முழுக்க உண்மை என்பது நிரூபிக்கப் பட்டது.

நகர்வாலா ஒரு 'பலகுரல் மன்னன்'தானா?

இனி, நகர்வாலா மீதான இரண்டாவது குற்றச் சாட்டுக்கு வருவோம் இது ஆள்மாறாட்டம் செய்ததாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டு பிரதமர் போலவும் பிரதமரின் தனிச்செயலாளர் ஹக்சார் போலவும் டெலிபோனில் பேசி ஆள்மாறாட்டம் செய்து விட்டார் என்பதுதான் குற்றப்பத்திரிகையில் விளக்கமாகக் கூறப்பட்டிருப்பது.

அதாவது, நகர்வாலா ஒரு பல குரல் மன்னன்" என்பது போலீஸ் குற்றச்சாட்டு. இது பற்றியும் புது டில்லி மாஜிஸ்திரேட் உண்மையை அறிய அதிக அக்கறை காட்டவில்லை. அவர்தான், ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றே போதும் என்ற வேதவாக்கைக் கடைப் பிடிப்பவராக நடந்திருக்கிறாரா ? பின் என்ன செய்வது ?

பிரதமர் இந்திராவின் இனிய பெண்மைக்குரல்

"தாம் பல குரல் மன்னனா" என்று நகர்வாலாவே விளக்கமாகக் கூறினார், மறு விசாரணையின் போது அதன் விவரம் வருமாறு:—

"நான் 1966ஆம் ஆண்டு ஜப்பானுக்கும் போயிருந்தேன், தாயகம் திரும்பியதும் கார் விபத்து ஒன்றில் சிக்கினேன். பம்பாய்க்கும் புனாவுக்கும் இடையே இந்த விபத்து நடைபெற்றது. இதில் என் மண்டை ஓடு உடைந்து போய்விட்டது. பல மாதங்களாக என்னால் வாய்திறந்து பேசமுடியாது என் முகத்தில் பக்கவாதம் ஏற்பட்டது பிளாஸ்டிக் சர்ஜரி செய்துகொள்ள வேண்டியதாயிற்று நானாவது இனிய பெண்மைக் குரல் படைத்த பிரதமர் மாதிரி குரல் கொடுப்பதாவது!

கண்வழியாகவும் காதுவழியாகவும் இரத்தம்

இனி புனாவில் நகர்வாலாவுக்கு சிகிச்சை செய்த ஜகாங்கீர் மெடிக்கல் நர்சிங்ஹோம் டாக்டர் கூறுவதைக் கேட்போம் :

"நகர் வாவாவின் மண்டை ஓடும் மூக்கும் உடைபட்டிருந்தன கீழ்த்தாடைப்பல் தாடையை துளைத்துக் கொண்டு வெளியே நீட்டிக்கொண்டிருந்தது கண்கள் வழியாகவும் காதுகள் வழியாகவும் இரத்தம் வந்து கொண்டிருந்தது அவரால் பல குரலில் பேசுவதற்கு இயலாது.

கடைசியாக நகர்வாலாவின் வக்கீல் மகேஸ்வரி கூறுகிறார் :—

" தமது சொந்தக்குரலில் பேசுவதற்கே ஓரளவு சிரம்மம் எடுத்து முயற்சி செய்தால்தான் நகர்வாலா வினால் முடியும் அவர் பேசும்போதெல்லாம் தமது கையை தமது தாடையில் வைத்துக் கொள்வார் "

பிரதமர் குரலா அல்லது மர்மக்குரலா ?

ஆக, நகர்வாலா "பல குரல் மன்னன்" அல்ல என்பது நிச்சயமாகிறது அப்படியானால் டெலிபோனில் பிரதமர் போலப் பேசிய ஆள் மாறாட்டம் செய்தார் நகர்வாலா என்ற குற்றச் சாட்டு அடியற்று வீழ்ந்து விடுகிறதே; டெலிபோனில் பேசியது பிரதமர் குரல் போன்ற பிரதமரின் செயலாளர் போலிக் குரல் படைத்த நகர்வாலா அல்ல என்றால் உண்மையிலேயே பேசியது யார்? ஒன்றில் அதுபிரதமராக இருக்கவேண்டும் அத்துடன் பிரதமரின் தனிச் செயலாளர் ஹக்சாராக இருக்க வேண்டும் அல்லது வேறுயாராவது ஒரு பல குரல் மன்னாகத் தானே இருக்கவேண்டும் அது யார் உண்மையிலேயே ?

இங்கே நமக்குக் கைகொடுத்து உதவுகிறார் பிரதம காஷியர் மல்ஹோத்ரா அவர் இன்னும் திட்ட வட்டமாகக் கூறிக்கொண்டிருக்கிறார் "என்னிடம் டெலிபோனில் பேசியது சாட்சாத் பிரதமர்தான்" என்று மல்ஹோத்ரா சொன்னது அப்படியே உண்மை என்று போலீஸ் ஏற்கவேண்டும் என்பதில்லை என்றாலும் பிரதமர் அல்ல என்றால் வேறு யார் என்று அறிய இது வரை எடுத்த முயற்சி என்ன ? இதற்குப் பதில் கூறியகா வேண்டும் கூறுமா ?

8. சிறையைவிட்டு வெளியே வந்தால் உயிருக்கு ஆபத்து

2 வருட கடுங்காவல் தண்டனை விதிக்க ஒரு மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரம் உண்டா?—இப்படியொரு

கேள்வி அகில இந்தியாவிலும் உள்ள சட்டம் படித்த வழக்கறிஞர்கள் மத்தியில் கிளப்பப்பட்டது.

இத்தனை பெரிய வழக்கு ஒன்று மூன்றே மூன்று நாள் விசாரணைக்குள் முடிவடைந்து தீர்ப்பும் வழங்கப் பட்டது இந்தியாவின் சட்டத்துறை வரலாற்றில் இதற்கு முன் எப்போதாவது நிகழ்ந்திருக்கிறதா என்று சில பல இடங்களிலே கேள்வி எதிரொலிக்கத்தொடங்கியது.

அந்த 60 லட்ச ரூபாயும் பாங்கின் பணமல்ல

அரசியல் பெருந்தலைகள் எல்லாம் இதில் உருளப் போகின்றன என்று எதிர்பார்த்து ஏமாந்துபோனவர்கள் சும்மா இருப்பார்களா? பல வகைகளில் இதன் எதிரொலி கேட்கத் தொடங்கியது.

அரசியல் என்ற பெயரில் அனைத்து விவகாரங் களையும் அலசியெடுக்கும் அரங்கமான பாராளு மன்றத்தில் இது கிளப்பப்படாமல் இருக்கமுடியுமா?

உறுப்பினர்கள் சிலர் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு நிதி அமைச்சர் சவான் பதில் கூறினார். ஸ்டேட் பாங்குப் பணம் அதாவது, அரசாங்கத்துக்குச் சொந்தமான பணம் ரூ. 60 லட்சம் பாழாகிவிட்டதே என்றுதானே இத்தனைக் கூப்பாடு போடப்படுகிறது என்று மனத்துக்குள்ளாக அவர் ஒரு அனுமானம் செய்தார். அதற்கு ஒரே வாக்கியத்திலும் பதிலும் கூறினார். "நகர்வாலா பெற்றுப்போன பணம் பாங்கின் பணம் அல்ல" என்றார் அவர்.

யார் அப்பன் வீட்டுப் பணம் இந்த ரூ. 60 லட்சம்?

ஒத்திவைப்புத் தீர்மானம் இற்று வீழ்ந்துவிட்டது. அந்த 60 லட்ச ரூபாயும் ஸ்டேட் பாங்குப் பணம் இல்லை என்றால், யார் அப்பன் வீட்டுப் பணம்? யாரிடம் கேட்டுக்கொண்டு அதை ஸ்டேட் பாங்கிலே கொண்டு

வைத்துக்கொண்டு பிரதம காஷியர் கொடுக்கல்—வாங்கல் செய்கிறார்? பிரதமர் குரலில் டெலிபோன் அவரது செயலாளர் ஹக்சார் குரலில் டெலிபோன் வங்கதேசத்திற்கான ரகசியச் செலவு என்ற வர்ணனை—ஆகிய இவை அனைத்தும் உரியவர்களால் உரிய முறையில் ஏன் மறுக்கப்படவில்லை? இப்படிப்பட்ட கேள்விகள் எல்லாம் 'ரோடு ரோலர் மெஜாரிட்டியுள்ள பாராளுமன்றத்தில் புதைந்து' போனதில் வியப்பில்லை.

இத்தகைய கேள்விகளுக்கு நாகரீகமான அரசியல் ஆரோக்கியத்துடன் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கும் அரசு அவ்வாறு செய்யவில்லை. எப்படியோ எதிர்க்கட்சியினரின் வாயை கட்டிவைப்பதில் முயன்றார்களே தவிர, வேறெதுவும் இல்லை.

வெளிப்படை வேலையும் மர்மமான காரியமும்

நகர்வாலா வழக்கினைத் தொடர்ந்து சில பல காரியங்களை வெளிப்படையாகச் செய்தது மத்திய அரசு. வேறு சில காரியங்கள் அவ்வாறு வெளிப்படையாகச் செய்யப்படவில்லை என்றாலும், அப்படிச் செய்ததில் அர்த்தபுஷ்டி இருந்தது. மூளையிலுள்ள பொதுமக்களுக்கு விளங்காமல் போய்விடவில்லை. மத்திய அரசின் இந்த நடவடிக்கைகளுக்கிடையே மர்மமான சம்பவங்களும் நடைபெற்று வந்தன.

இந்தச் சம்பவங்கள், நடவடிக்கைகள் தீவிரமாக நடத்தப்படுவதற்கு இன்னொரு பெரிய காரணமும் இருந்தது. அதுதான் நகர்வாலா வழக்குபற்றிய அப்பீல்.

முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டின் தீர்ப்பு முறையற்றது; சட்டப்படி அமைந்தது அல்ல என்று கூறி ஊர்மிளேஷ் ஜா என்பவர் டில்லி உயர்நீதிமன்றத்தில் ஓர் வழக்குத் தொடர்ந்தார்.

நகர்வாலாவுக்கு இரட்டை வெற்றி

இந்த வழக்கை டில்லி உயர்நீதி மன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது. நகர்வாலா வழக்கு சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள் அனைத்தையும்

தாக்கல் செய்யும்படி மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கும், போலீசுக்கும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதற்கிடையில் நகர்வாலாவும்கூட தமது வழக்கை மறு விசாரணை நடத்தவேண்டும் என்றும், தம்மை ஜாமீனில் வெளியே விடவேண்டும் என்றும் கோரி, டில்லி செஷன்ஸ் கோர்ட்டில் மனுக்கொடுத்தார்.

ஏற்கெனவே, மாஜிஸ்திரேட் விசாரணை நடத்தி, தீர்ப்பு வழங்கிய முறை குறித்துச் சட்டம் மற்றும் வழக்கறிஞர் துறைகளில் நல்ல அபிப்பிராயம் நிலவவில்லை என்பது ஒரு காரணம். இது விஷயத்தில் டில்லி உயர்நீதிமன்றம் நடந்துகொண்ட விதம் இன்னொரு காரணம். ஆக, இந்த இரு காரணங்களுக்காக, நகர்வாலாவின் இரு கோரிக்கைகளுமே ஏற்கப்பட்டுவிட்டன.

வெளியே வந்தால் உயிருக்கே ஆபத்து!

இந்த இரண்டு வெற்றிகளையும் சுவைக்கக்கூடிய நிலையில் நகர்வாலா அப்போது இல்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் தனது மேலிட எதிரிகள் எத்தனை கொலை பாதகத்துக்கும் அஞ்சாதவர்கள் என்பதை நன்கு அறிந்திருந்தார் அவர்.

ராணுவத்தில் காப்டனாக இருந்து உயிரோடு கண்ணாமூச்சி விளையாடிப் பழகியவர்தான் நகர்வாலா. எனவே, தமது உயிருக்கு ஆபத்து வரும் என்று பயந்து கோழைபோல அவர் நடக்கவில்லை. என்றாலும், அஞ்சுவது அஞ்சாமை பேதமை அல்லவா ?

நகர்வாலா தமது வழக்கின் மறுவிசாரணை சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்தார், சிறையின் உள்ளேயே அவர் தொடர்ந்து தங்கியிருந்தார். தமது வக்கீல் ஆர். கே. மகேஸ்வரியை அவ்வப்போது அவர் சந்தித்துப் பேசினார்.

பெரிய புள்ளிகளைப்பற்றிச் சந்தி சிரிக்கட்டும்

வழக்கு ஏற்பாடுகள் தீவிரமாக நடத்தப்பட்டும்கூட அவர் (நகர்வாலா) வெளியே இருந்தால், எத்தனை

வசதியிருக்குமோ அத்தனை தூரம் வசதி இருக்காது அல்லவா? எனவே, அவரை வெளியே ஜாமீனில் வரும்படி வக்கீலும் மற்றும் சில நண்பர்களும் வற்புறுத்தினார்கள்.

இந்த வற்புறுத்தலுக்கெல்லாம் நகர்வாலா அசைந்து கொடுக்கவில்லை. "நான் வெளியே வந்தால் நிச்சயம் கொலை செய்யப்பட்டு விடுவேன். என்றாலும், செத்துப் போவோமே என்ற பயத்தின் காரணமாக நான் சிறையில் முடங்கிக் கிடக்கவில்லை. நான் செத்துப் போனால் இந்த வழக்குப் பற்றிய உண்மைகள் வெளியே தெரியாமல் அப்படியே மண்மூடி மங்கிப் போய்விடுமே! இதில் சம்பந்தப்பட்ட பெரிய பெரிய புள்ளிகளை யெல்லாம் சந்தி சிரிக்கும்படி ஆக்கமுடியாமல் போய் விடுமே. அதற்காகத்தான் நான் என் உடம்பில் உயிரைச் சுமந்துகொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பத்திரமான இடம் சிறைச்சாலைதான்', என்று பிடிவாதமாகக் கூறி, ஜாமீன் விடுதலை கிடைத்தும் அதை அனுபவிக்க மறுத்தார்.

என்றால், அவரால் தமது சாவைத் (கொலையை?) தடுத்து நிறுத்த முடிந்ததா?

9. மர்மமான கார் விபத்தில் போலீஸ் அதிகாரி மரணம்

நகர்வாலாவும், அவர்தம் வக்கீலான ஆர். கே. மஹேஸ்வரியும் வழக்கின் மறுவிசாரணைக்கான ஏற்பாடுகளைத் துரிதப்படுத்திவரும் அதே நேரத்தில், அரசும் தனது வேலைகளில் வெகு தீவிரம் காட்டியது.

துஷ்டநிக்ரகமும் சிஷ்ட பரிபாலனமும்

நகர்வாலாவின் வழக்கில் முக்கியமான பாகம் பாங்கு அதிகாரிகளினுடையது, அவர்கள் எல்லாம் சரியான முறையில் கவனிக்கப்பட ஏற்பாடு செய்யப் பட்டதா, இல்லையா என்பது குறித்து நமக்குத் தகவல்

இல்லை. ஏதோ பெயரளவுக்கு மல்ஹோத்ரா சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

ஆனால், நிகழ்ச்சியின் அடிப்படையில் பாங்கு அதிகாரிகள் எத்தனை முக்கியமானவர்களோ அதே போல வழக்கு அடிப்படையில் போலீஸ் அதிகாரிகள் மிகவும் முக்கியமானவர்கள். எனவே, இதில் சம்பந்தப் பட்ட போலீஸ் அதிகாரிகளை அரசு கவனிக்கத் தொடங்கியது.

துஷ்ட நிக்ரக—சிஷ்ட பரிபாலனம் என்று கூறு வார்களே, அதே பாணியில்தான் அரசின் நடவடிக் கைகள் அமைந்திருந்தன. முதலில் துஷ்டநிக்ரகம் அதாவது, தங்களுக்கு எதிர்ப்பாக இருப்பவர்களை ஒழித்துக் கட்டுவது பின்னர் இந்த முதலடியின் கோரத்தை எண்ணி பிறர்—அனைவரும் துஷ்டர்களாக இருப்பதை விட்டுவிட்டு சிஷ்டர்களாக மாறிவிடுவார்கள் என்பதுதான் போர்த் தந்திரம்!

டிசம்பர் மாதம் 13-ந் தேதியன்று இந்த வழக்கின் மறுவிசாரணை நடைபெற வேண்டும் என்று தேதி குறிப்பிடப்பட்டிருந்தது.

மர்மமான கார் விபத்தில் போலீஸ் அதிகாரி பலி

அதற்கு 3 வாரங்களுக்கு முன்னால், நவம்பர் 20-ந் தேதியன்று ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. நகர்வாலா வழக்கில் துப்புத்துலக்கிய போலீஸ் அதிகாரிகளில் முக்கியமானவரும் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட சாட்சிகளில் மிகவும் இன்றியமையாதவருமான காஷ்யப் (அடிஷனல் போலீஸ் சூப்பிரெண்டு) பயணம் செய்த கார்மீது ஒரு லாரி மோதி காஷ்யப் காலமானார்! நகர்வாலாவைக் கைது செய்தவர் இவரே, இவரிடம் நகர்வாலா உடனடியாகக் கூறிய சமாச்சாரங்கள்தாம் மிகவும் பயங்கரமான உண்மைகள் என்று கருதப்படு கின்றன.

நகர்வாலா வழக்கின் மர்மங்கள் டில்லிப் பட்டணத் தில் பலர் காதிலும் பல மாதிரி புகுந்து, பலர் வாயிலும்

பலமாதிரி வெளியேறியது. எனவே இந்தப் போலீஸ் அதிகாரி மரணம் அடைந்ததுபற்றிப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அடிஷனல் போலீஸ் சூப்பிரெண்டு காஷ்யப் டில்லியிலிருந்து வெளியூர் போயிருந்தபோது மதுரா என்ற இடத்தின் அருகே இந்த கார்-லாரி மோதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

எங்கப்பன் குதிருக்குள் இல்லவே இல்லை

கார் விபத்தில் காலமானார் என்பதெல்லாம் சுத்தப் பொய்; அவர் காலமாகவில்லை; அவரது சாவில் பெரிய மர்மம் சூழ்ந்திருக்கிறது. இது சாவே இல்லை; இது கொலை. திட்டமிட்ட பயங்கரமான சதி ஒன்றின் விளைவாகவே இந்தக் கொலை சாதாரணமான விபத்து போல காட்டப்பட்டிருக்கிறது. உண்மையில் விபத்து, சாவு என்பதெல்லாம் பொய், கொலை சதி என்பது உண்மை'' என்று டில்லி நகரே பேசியது.

இது வெறும் வதந்தி; இதில் துளிகூட உண்மை கிடையாது என்றுதான் முதலில் அதிகார மட்டத்தில் இருந்து விளக்கம் கூறப்பட்டது. என்றாலும் இதை யடுத்து அரசு எடுத்த சில நடவடிக்கை ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்ற பாணியில் அமைந் திருந்தது.

'திடீர்' பதவி உயர்வுகள், இடமாற்றங்கள்

மாண்டுபோன காஷ்யப்பின் மேலதிகாரி ஓய், ராஜ் பால். இவர் புதுடில்லி போலீஸ் சூப்பிரெண்டு. இவர் 'திடீர்' என்று ஒருநாள் பதவி உயர்வு பெற்றார். உயர்ந்த பதவியில் மத்திய புலனாய்வுத் துறையில் (சி. பி. அய்.) இந்த ராஜ்பால் நியமிக்கப்பட்டார். மாண்டுபோன காஷ்யப்பின் கீழே பணியாற்றிய இரண்டு இன்ஸ்பெக் டர்கள் ஏ.கே. போஸ் என்பவரும், அரிதேவ் என்பவரும் கூட இதேபோல பதவி உயர்வு பெற்றனர். அதோடு, இடமாற்றமும் இவர்கள் இருவருக்கும் உத்தரவிடப் பட்டது.

இன்னொரு மிகப் பயங்கர நிகழ்ச்சி

ஒருவர் செத்தார்; அதைத் தொடர்ந்து மூவர் பதவி உயர்வு பெற்றார்கள் என்றதுமே இதில் ஏதோ சூது இருக்கிறது. செத்தவர் சும்மா சாகவில்லை; மர்மமாக கொலை செய்யப்பட்டார் என்றுதானே நாலு பேர் சந்தேகம் கொள்ளும்படித்தானே இருக்கும்! அதுவும் இவர்கள் அனைவரும் ஒரு மிகப் பெரிய வழக்கில் முக்கியமான பாத்திரம் வகிப்பவர்கள் என்னும்போது மர்மம் இருக்கிறது; மரணமாக இருக்காது—கொலை யாக இருக்கும் என்ற வதந்தியே உண்மையானது என்று மக்கள் நம்பத்தானே செய்வார்கள்.

இப்படி இருக்கும்போது இதையெல்லாம் உண்மை என்று ஆக்கும் ஒரு பயங்கர நிகழ்க்சியும் நடந்தே விட்டது.

10. பிரதம காஷியரின் மரணம் எப்போது?

1972 மார்ச் மாதம் 2 ஆம் நாள் பிற்பகலில் மணி சரியாக 1-30 சிறையில் இருந்து மாற்றப்பட்டு ஜி. பி. பந்த் மருத்துவமனையில் இருந்த நகர்வாலாவுக்கு 'தீடீர்' என்று ஏதோ ஒரு மயக்கம் 'தீவிரக்கவனிப்புப் பிரிவில்' நகர்வாலாவை சேர்த்து தீவிர சிகிச்சை செய் தார்கள்.

மாரடைப்பால் வந்தது திடீர் மரணமாம்

சரியாக ஒன்றேகால் மணிநேரம்தான் சிகிச்சை செய்யப்பட்டது சிகிச்சை பலனளிக்காமல் சரியாக 2–45 மணிக்கு நகர்வாலா மரணம் அடைந்தார் அவரைக் கவனித்த டாக்டர்கள் அவருக்கு 'மாரடைப்பு' என்றும் அதனாலேயே அவர் உயிர் விரைவில் போய்விட்டது என்றும் காரணம் கற்பித்தார்கள்.

நகர்வாலாவின் மரணம் அவரது வக்கீல் ஆர். கே. மகேஸ்வரிக்குப் பெரிய அதிர்ச்சி ஏனென்றால் நகர்

வாலா சாவது என்பதை அவர் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஏனென்றால் 1-30 மணிக்கு 'மாரடைப்பு' ஏற்பட்டதற்கு சில நிமிஷ நேரத்துக்கு முன்புதான் மகேஸ்வரியும் நகர்வாலாவும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பெரிய புள்ளிகளின் அந்தரங்க வாழ்க்கை

"வழக்கின் மறு விசாரணையின் போது பல பேருடைய முகமூடிகள் கிழித்தெரியப்படும்; பலப்பல மர்மங்கள், பெரிய புள்ளிகளின் அந்தரங்க வாழ்க்கை துளிகள் எல்லாம் மறு விசாரணையின் போது 'அவுட்' ஆவது நிச்சயம்' என்று நகர்வாலாவே கூறினார்.

இந்தக் கூற்றுதான் நகர்வாலாவின் உயிரைப் பறித்துக்கொண்டதா— இது அறுபது லட்சம் பெறுமான கேள்வி அல்லவா?

ஆள் செத்தால் விவகாரமும் சாக வேண்டுமா?

நகர்வாலா செத்துப் போனார்-இல்லை. சாகடிக்கப் பட்டார் என்பதால் நகர்வாலா விவகாரமும் செத்துப் போய்விட வேண்டுமா? செத்துப் போகத்தான் வேண்டும் என்றால் இந்த நாட்டில் ஜனநாயகம், சோஷலிசம் எல்லாம் செத்துப் போக வேண்டியவை என்று தானே நாம் முடிவு செய்ய நேரிடும். செத்துப் போன நகர்வாலாவின் உயிரை மீட்கயாராலும் இனி இயலாது. அப்படி மீட்டுத் தரவேண்டும் என்று யாரும் அரசிடம் கேட்கப் போவதில்லை. அதே போன்று காஷயப்பின் உயிரையும் மீட்டுத் தரும்படி யாரும் அரசிடம் கோரிக்கை விடுக்கப்போவதில்லை.

என்றாலும் கூட இந்தப் பிணங்கள் ஏதோ "வெந்ததைத்தின்று—விதி வந்தால் சாவோம்" என்ற செம்மறி மந்தையின் சாவு போன்றவையா? இந்தப் பிணங்கள் அப்படி அல்ல! இது மட்டும் நிச்சயம்.

பத்திரிகை அலுவலகத்தில் எத்தனை லட்சம்?

இந்தப் பிணங்கள் இன்று பிணமாக ஆகாமல் இருந்திருந்தால் நகர்வாலா வழக்கின் மறு விசாரணை யின் போது மர்மங்கள் பல உடைக்கப்பட்டிருக்கும் பெரிய பெரிய தலைவர்கள் எத்தனையோ பேரின் தலைகள் உருட்டப்பட்டிருக்கும் என்பது உண்மை அல்லவா!

இந்தப் பணமும் அதனுடன் சேர்ந்த இது போன்ற இன்னும் பல மடங்கு பணமும் சில காலத்துக்கு முன்பு வரை புது டில்லியில் உள்ள பத்திரிகை அலுவலகம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது என்றும் இது ஒரு பத்திரிகை அலுவலகத்தில் வைத்துக்கொண்டிருக்கக் கூடிய அளவு சாதாரணத் தொகை என்பதால் பாது காப்புக் கண்ணோட்டத்தில்தான் இப்பணம் ஸ்டேட் பாங்குக்கு மாற்றப் பட்டது என்றும் ஸ்டேட் பாங்கின் **Strong Room** எனப்படும் கருவூலக் காவலறையில் இதற் கென்று தனிப்பெட்டகம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது என்றும் இதைத் திறப்பது, பூட்டுவது இதில் பணம் எடுப்பது வைப்பது எல்லாம் பிரதம காஷியர் மல்ஹோத்ரா ஒருவருக்குமட்டும் உரிமையான பணி என்றும் இந்தக் கணக்கையெல்லாம் கவனித்து உத்தர விடும், இதிலே பணம் மேலும் மேலும் போடக் கொடுக்கும்; இதிலே இருந்து பணம் எடுக்கச்சொல்லும் உரிமை, அதாவது இந்தப்பண்த்துக்கு உரிமை படைத் தவர் மேலிடத்து மிகப்பெரும் புள்ளி என்றும் மேற்படி பிண்ங்கள் இரண்டுக்கும் தெரியுமாமே!

இந்திய வரலாறே மாறச்செய்யும் வழக்கு

எனவேதான் மேலிடத்து கிருபா கடாட்சம் இவர்கள் மீது விழுந்து இவர்கள் பஸ்பமாகி விட்டார்களாமே! இந்தப்பிணங்களின் நாயகர்கள் மட்டும் உயிரோடு இருந்து இவர்கள் இருவரும் நேர்மை உணர்ச்சியும் நெஞ்சு உறுதியுடன் நீதிமன்றத்திலே தாங்கள் விசாரிக்கப்படும் போது தங்களுக்கு தெரிந்த ரகசியங்களை அனைத்தும்

வெளியே கூறியிருந்தால் கூறும்படி நேரிட்டிருந்தால் இந்திய வரலாறே இன்று மாறிபோயிருக்கும் என்று பரவலாகப்பேச்சு அடிபடுகிறதே! இதை மக்கள் நம்பக் கூடாது என்று அரசினால் தடை விதிக்க முடியுமா ?

மூன்றாவது பலிக்கடா பிரதம காஷியரா ?

இந்த மர்மங்களையெல்லாம் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கும் வெளி மனிதர் இப்போது ஒரே ஒருவர் தான் அவர் சாட்சாத் பிரதம காஷியர் மல்ஹோத்ரா ஆவார் இவர் கடந்த சில காலமாக பேயறைந்தது போல என்று கூறுவார்களே அதுபோல இருக்கிறாராம். அதிர்ச்சி அடைந்துபோய், என்ன செய்வது என்று புரியாமல் குழம்பிப்போயிருக்கிறாராம். அடிஷனல் போலீஸ் சூப்பிரெண்டு காஷ்யப்போலதாமும் எந்த நிமிஷத்திலும் கார் விபத்திலோ அல்லது பிற எதாவது விபத்திலோ உயிரிழக்கும்படி சாகடிக்கப்படலாம், அல்லது நகர்வாலாவுக்கு வந்ததுபோல மாரடைப்பு நோய் வந்து மரணமடைந்தார் என்று டாக்டர்கள் அறிவிக்கும்நிலை தோன்றலாம் என்று பீதியுடன் இருக் கிறாராம் மல்ஹோத்ரா.

பாங்கு தேசிய மயமானது இதற்குத்தானா ?

இந்த மல்ஹோத்ராவும் அவர்களின் கதியை விரைவில் அடைவார்; அல்லது விரைவில் பெரும் பதவி ஒன்றுக்கு உயர்வு செய்யப்படுவார் என்று எதிர் பார்க்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம். அப்படி நடக்கிறது என்றால் யார் என்ன நடவடிக் கையை எடுப்பது? அவரும் ஒரு நகர் வாலா ஆக்கப் படாமல் தடுக்கப்படுவாரா ? அவரும் ஒரு காஷ்யப்பாக ஆக்கப்படாமல் விலக்கப்படுவாரா ?

11. ரூ. 60 லட்சத்தைக் கோரி தாயார் வழக்கு தொடர்ந்தால்?...

இதற்கிடையில் ஒரு சுவையான காரியத்தை டில்லி செஷன்ஸ் நீதிபதி கக்கார் செய்திருக்கிறார்

அதன் சுவையை உங்களுக்குப் படைக்கிறோம். (இந்த கக்காரின் கோர்ட்டில் மறுவிசாரணை ஆரம்பமான பிறகு இந்த வழக்கு மறுவிசாரணையை வேறு கோர்ட்டுக்கு மாற்ற வேண்டும் என்று கோரி டில்லி உயர்நீதி மன்றத்தில் நகர்வாலா சார்பில் மனுகொடுக்கப் பட்டது. அதுவும்கூட சுவையான ஒரு செய்தி என்ப தால் இங்கே அதைக் கூறிவைக்கிறோம்)

பிறந்த நாளிலேயே மரணமும் அடைந்தார்

மார்ச் 2-ந் தேதியன்று நகர்வாலா மரணம் அடைந் தார். (அன்று அவரது 51-வது பிறந்த நாள்!) சரியாக ஒருவாரம் கழித்து, மார்ச் 9-ந் தேதியன்று செஷன்**ஸ்** நீதிபதி ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். "நகர்வாலா விடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் முழுவதும் உடனடி யாக **ஸ்**டேட் பாங்கிடம் ஒப்படைக்கப்படவேண்டும்" என்பதே இந்த உத்தரவு.

இப்படியொரு உத்தரவை ஒரு நீதிபதி பிறப்பிக்க வேண்டும் என்றால் அவர் தீர விசாரித்து, அந்த விசாரணையின் விளைவாக, அப்பணம் **ஸ்**டேட் பாங்குக்குச் சொந்தமானதுதான் என்று சந்தேகமறக் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும் அப்படிக்கில்லாமல் நகர்வாலா செத்துப் போய்விட்டார் என்பதற்காக பணத்தை எப்படி **ஸ்**டேட் பாங்கிடம் ஒப்படைக்கலாம்? சட்டவிதிகள் இதற்கு அனுமதி அளிக்காதே.

சட்டம் கிடக்கட்டும்; சவானின் பதில் என்ன?

சட்டவிதிகள் கிடக்கட்டும்; சவான் இதற்கு என்ன பதில் கூறுகிறார்? வழக்கில் சம்பந்தப்பட்ட பணம் **ஸ்**டேட் பாங்குக்கு செந்தமானது அல்ல என்று முழங்கிய அவரது வாய் இன்று எங்கே மூடிப்போய் விட்டது?

மூடிக்கிடக்கும் இந்த வாயை மட்டுமல்ல; இந்த 60 லட்ச ரூபாயையும் சுற்றிப் பின்னிப் படர்ந்திருக்கும் மர்மக்கதைகள் அனைத்துமே திறந்து சந்தி சிரிக்கும் நிலை ஏற்பட வழியே இல்லையா? ஏனில்லை, நிச்சய மாக இருக்கிறது.

நகர்வாலா சொத்துக்கு யார் வாரிசு?

நகர்வாலாவின் தாயார் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார். ஒரு சகோதரியும் இருக்கிறார். இன்னும் அவரது நெருங்கிய உறவினர்கள் மேலும் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருமோ அல்லது இவர்களில் யாராவது ஒருவரோ நகர்வாலாவின் சொத்துக்கு தாங்களேவாரிசு என்று உரிமை கொண்டாடப் போவது நிச்சயம் அப்போது ஒரு பெரிய சிக்கல் தலை தூக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

நகர்வாலாவின் சொத்து என்னென்ன? இந்தக் கேள்விக்கு பதில் அத்தனை இலகுவாக யாரும் கூறிவிட முடியாது. நகர்வாலாவிடமிருந்து போலிஸ்சாரால் கைப்பற்றப்பட்ட பணமும் கூட நகர்வாலாவின் சொத்துத்தான் என்று வாரிசுதாரார் கருதினால் அதைத் தமக்கு வழங்கும்படி தகுந்த நீதிமன்றம் ஒன்றின் உதவியை அவர் நாடுவார் என்றால்... அந்த வழக்கு உண்மையிலேயே சுவையானதாக அமையும்.

எந்தக்கணக்குப் புத்தகத்தைப் புரட்டுவீர்கள்

நகர்வாலாவிடமிருந்துதான் இந்தப் பணம் கைப்பற்றப்பட்டது என்பது போலீசே ஒப்புக் கொண்ட உண்மை நிகழ்ச்சி நடந்ததாக கூறப்படும் 1971 ஆம் வருடம் மே மாதம் 24ந் தேதியன்று இரவு 10-30 மணிக்கு நகர்வாலாவிடமிருந்து போலீசார் கைப்பற்றியது ரூ. 60 லட்சத்துக்கு ரூ. 5700 மட்டுமே குறைவு அதாவது 59 லட்சத்து 94 ஆயிரத்து 300 ரூபாய் நகர்வாலா கொடுத்ததகவலின் பேரில் டிபென்ஸ் காலனியில் உள்ள அவரது நண்பர் ஒருவரிடமிருந்து போலீஸ் கைப்பற்றியது ரூ. 2000 ஆக 59 லட்சத்து 96 ஆயிரத்து 900 ரூபாய் நகர்வாலாவின் சொத்து என்று உரிமை கோரப்படலாம்.

அப்படியொரு வழக்கு தொடரப்பட்டால் இந்தப் பணம் தங்களின் சட்டபூர்வமான சொத்து என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு ஸ்டேட் பாங்கினைச் சேரும். அப்படியானால் எந்த கணக்குப் புத்தகத்தை

புரட்டிக்காட்டி தனது உரிமையை நிலைநாட்டும் ஸ்டேட்பாங்கு.

நாயர் பிடித்த புலிவாலாக ஸ்டேட்பாங்கு விவகாரம்

நகர்வாலாவின் உறவினர்களைப் பொருத்த மட்டிலும் அந்தப்பணம் நகர்வாலாவிடமிருந்து போலீசாரால் கைப்பற்றப்பட்டது என்பதற்கு போலீஸ் ரிக்கார்டே சாட்சி. அது மட்டுமே போதும். ஆனால் ஸ்டேட் பாங்கு விஷயம் அப்படி அல்ல! "நாயர் பிடித்த புலிவாலாக" அந்தப் பணம் ஸ்டேட் பாங்கின் நிர்வாகத்துக்கு விளங்கப்போகிறது.

ஸ்டேட் பாங்கின் பணம் என்று நிரூபிக்க முடியாமல் போனால் நகர்வாலாவின் வாரிசுதாரர்களுக்கே சொந்தமானது அப்பணம் என்று கோர்ட்டில் 'டிக்ரி' யாகி விட்டால் பின்னர் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடும் அந்தப்பணம் ஸ்டேட்பாங்கில் திருட்டுத்தனமாக பெரிய புள்ளிகளினால் வைக்கப்பட்ட கருப்புபணம் என்பது பட்டவர்த்தனமாகிவிடும்.

12. இதோ ஊழல் மகா காவியத்தின் உச்சகட்டம் பாரீர்

அப்படிக் கள்ளக்கணக்கும், கருப்பும் பணமும் வைத்திருந்த பெரிய மனிதர்கள் யார்? பிரதமரின் டெலிபோன் பேச்சு; பிரதமரின் உதவியாளரின் டெலிபோன் பேச்சு எல்லாம் அதன் பின்னரும்கூட பொய்யாய்ப் போய்விடுமா?

சீசரின் மனைவியும், பொதுவாழ்க்கை நியதியும்

பிரதமர்மீதே சுற்றிச் சுற்றிக் குற்றம் சுமத்தவும், சுற்றி வளைத்துப் பிரதமர்மீதே பழி போடவும் இங்கே யாரும் விரும்பவில்லை. பிரதமர் பெயர் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்டுவிட்ட வழக்கு இது. இப்படிப் பட்ட வழக்குகளின் விசாரணையும் தீர்ப்பும் எப்படி இருக்கவேண்டும்? போலீசாரால் குற்றம் சுமத்தப்பட்ட ஏதோ ஒரு ஆசாமி சிறையிலே தள்ளப்பட்டாலோ, அல்லது சவக்குழியிலே தள்ளப்பட்டாலோ அத்துடன்

கதை முடிந்தது; அதுவே தீர்ப்பு என்று இருந்துவிடக் கூடாது.

குற்றம்—அய்யமற நிரூபிக்கப்பட்டதா என்பதைக் கண்காணிப்பதில் நீதிமன்றமும், போலீஸ் துறையும் எத்தனை தூரம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமோ அதைவிடப் பல்லாயிரம் மடங்கு அக்கறை, இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்ட பிரமுகர்கள்,தலைவர்களின் தூய்மையை நிரூபிப்பதிலும் காட்டப்படவேண்டும். சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும் என்பதுதான் பொதுவாழ்வில் போற்றப்படவேண்டிய நெறி.

வழக்கு முடிந்ததும் விஸ்வரூபம் எடுத்தது

நகர்வாலா வழக்கு இதுவரை நடத்தப்பட்டிருக்கும் விதத்தைப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? சீசரின் மனைவி பற்றிய சந்தேகம் இந்த வழக்கு ஆரம்பமான போது சிறியதாக இருந்தது. வழக்கு முடிந்த பிறகு, 'விஸ்வரூபம்' என்பார்களே அதுபோல பெருத்து விட்டது! இதைக் களைவது சீசர்களுக்கு இன்றியமையாத கடமை அல்லவா?

நாம் கடைசியாகக் கூறவிரும்புவதெல்லாம் இது தான். செக் ஏதும் இல்லாமல் பாங்கிலே பணம் பெறலாம் என்ற சங்கேதமொழி முறை நடைமுறையில் இருக்கிறது என்பது இந்த வழக்கின்மூலம் தெரிந்து விட்டது. இதற்குப் பிரதமரும் சவானும் என்ன பதில் கூறுகிறார்கள்?

மடியில் கனமிருப்பதால்தான் மனத்தில் பயம் கவ்வுகிறது

இப்படியொரு நிகழ்ச்சி நடந்து, ஓகோ என்று ஊரெல்லாம் நாற்றமடித்த பின்பும்கூட இதுபற்றி ஸ்டேட் பாங்கில் என்ன விசாரணை நடத்தப்பட்டது? நடத்தப்படாமல் மூடி மறைக்கப்பட்டிருக்கிறதே; இதன் பெயர் என்ன? மடியில் கனமிருப்பதால்தானே வழியில் பயம் கவ்வுகிறது?

பிரதமர் என்றதும் ஏதோ மனிதப் பிறவிக்கு அப்பாற்பட்ட ஒருவராக அவரை வர்ணித்துவரும் ஆசாமிகளை நாம் கேட்க விரும்புகிறோம். இதுபற்றி ஆழமாக விசாரணை நடத்தப்பட வேண்டாமா? பிரதமர் பாங்குகளைத் தேசியமயமாக்கியது இப்படிப் பட்ட கைங்கர்யங்களைச் செய்வதற்குத்தானா?

இவையெல்லாம் இந்திராவின் கருப்புப் பணமா?

சோஷலிசம் என்றால், இப்படித்தான் செயல் வேண்டுமோ? அதிகம் போகவேண்டாம். அந்தப் பணம் பாங்கின் பணமல்ல என்பது உண்மையானால் யார் பெயரில் உள்ள பணம்? இந்த ஒரே உண்மையை மட்டும் வெளியே கொண்டுவர வேண்டாமா?

அப்படி உண்மை பகிரங்கப்படுத்தப்படாவிட்டால் அது இந்திராவின் பெயரால் உள்ள கருப்புப்பணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுவதில் பசை யிருக்கத்தானே செய்யும்?

அந்தரத்தில் தேர் ஓட்டும் ஊழல் புகார் ஒப்பாரியாளர்கள்

ஊழல் ஊழல் என்று மற்ற கட்சிகளையும், மற்ற தலைவர்களையும் பார்த்து ஓயாமல் ஊளையிட்டு வரும் புதுக்காங்கிர**ஸ்**, பழைய காங்கிர**ஸ்**, வலது கம்யூ**னி**ஸ்டு கள் இதற்கு என்ன பதில் சொல்வார்கள்?

ஊழல் ஒன்று இத்தனை ஆதாரங்களுடன் சிக்கி விட்ட பிறகும்கூட ஆதாரங்கள் அனைத்தையும் நசுக்கி கழுத்தை நெரித்துக் கொல்வதுபோல ஆதாரங் களை அமுக்கி, ஊழலை மூடி மறைத்திருப்பது ஊழல் மகாகாவியத்தின் உச்சகட்டம் அல்லவா? ஆதாரம் துளிகூட இல்லாமலே அந்தரத்தில் தேர் ஓட்டும் இங்குள்ள ஊழல் புகார் ஒப்பாரியாளர்களே! உங்களைத்தான் கேட்கிறோம்! எங்கே உங்கள் பதில்?

"கடவுள் இல்லை,

கடவுள் இல்லை,

கடவுள் இல்லவே இல்லை

கடவுளைக் கற்பித்தவன்

முட்டாள்,

கடவுளைப் பரப்பியவன்

அயோக்கியன்,

கடவுளை

வணங்குகிறவன்

காட்டுமிராண்டி"